ஶ்ரீ:

ஶ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

ஶ்ரீமாந் வேங்கடநாத$_2$ார்ய: கவிதார்க்கிககேஸரீ ।
வேத$_3$ாந்தாசார்யவர்யோ மே ஸந்நித$_4$த்தாம் ஸத$_3$ா ஹ்ருதி$_3$ ॥

திருமங்கையாழ்வார் அருளிச்செய்த

# ॥ தந்தைதாய் ॥

*This document* has been prepared by*

***Sunder Kidambi***

*with the blessings of*

ஶ்ரீ ரங்க$_3$ராமாநுஜ மஹாதே$_3$ஶிகன்

**His Holiness *śrīmad āṇḍavan* of *śrīraṅgam***

*This was typeset using skt, LaTeX, Itrans, and the iitmtam font.

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# ॥ தந்தைதாய் ॥

## திருவல்லவாழ்

‡தந்தை தாய் மக்களே⋆
    சுற்றம் என்றுற்றவர் பற்றி நின்ற⋆
பந்தமார் வாழ்க்கையை⋆
    நொந்து நீ பழியெனக் கருதினாயேல்⋆
அந்தமாய் ஆதியாய்⋆ ஆதிக்கும்
    ஆதியாய் ஆயனாய⋆
மைந்தனார் வல்லவாழ்⋆ சொல்லுமா
    வல்லையாய் மருவு நெஞ்சே! (1)

மின்னு மா வல்லியும் வஞ்சியும்
    வென்ற⋆ நுண்ணிடை நுடங்கும்⋆
அன்ன மென் நடையினார் கலவியை⋆
    அருவருத்தஞ்சினாயேல்⋆
துன்னு மா மணி முடிப் பஞ்சவர்க்காகி⋆
    முன் தூது சென்ற⋆
மன்னனார் வல்லவாழ்⋆ சொல்லுமா
    வல்லையாய் மருவு நெஞ்சே! (2)

பூணுலா மென் முலைப் பாவைமார்⋆
    பொய்யினை மெய் இதென்று⋆
பேணுவார் பேசும் அப்பேச்சை⋆
    நீ பிழையெனக் கருதினாயேல்⋆
நீணிலா வெண் குடை வாணனார்⋆
    வேள்வியில் மண் இரந்த⋆
மாணியார் வல்லவாழ்⋆ சொல்லுமா
    வல்லையாய் மருவு நெஞ்சே! (3)

www.prapatti.com

பண்ணுலாம் மென் மொழிப் பாவைமார்⋆
 பணைமுலை அணைதும் நாம் என்று⋆
எண்ணுவார் எண்ணமதொழித்து⋆ நீ
 பிழைத்துய்யக் கருதினாயேல்⋆
விண்ணுளார் விண்ணின் மீதியன்ற⋆
 வேங்கடத்துளார்⋆ வளங்கொள் முந்நீர்
வண்ணனார் வல்லவாழ்⋆ சொல்லுமா
 வல்லையாய் மருவு நெஞ்சே! (4)

மஞ்சு தோய் வெண் குடை மன்னராய்⋆
 வாரணம் சூழ வாழ்ந்தார்⋆
துஞ்சினார் என்பதோர் சொல்லை⋆
 நீ துயர் எனக் கருதினாயேல்⋆
நஞ்சு தோய் கொங்கைமேல் அங்கைவாய்
 வைத்து⋆ அவள் நாளை உண்ட⋆
மைந்தனார் வல்லவாழ்⋆ சொல்லுமா
 வல்லையாய் மருவு நெஞ்சே! (5)

உருவினார் பிறவி சேர்⋆ ஊன் பொதி
 நரம்பு தோல் குரம்பையுள் புக்கு⋆
அருவி நோய் செய்து நின்றைவர் தாம்⋆
 வாழ்வதற்கஞ்சினாயேல்⋆
திருவினார் வேதம் நான்கைந்து தீ⋆
 வேள்வியோடங்கம் ஆறும்⋆
மருவினார் வல்லவாழ்⋆ சொல்லுமா
 வல்லையாய் மருவு நெஞ்சே! (6)

நோய் எலாம் பெய்ததோர் ஆக்கையை⋆
 மெய்யெனக் கொண்டு⋆ வாளா
பேயர் தாம் பேசும் அப்பேச்சை⋆ நீ
 பிழையெனக் கருதினாயேல்⋆
தீயுலா வெங்கதிர்த் திங்களாய்⋆
 மங்குல் வான் ஆகி நின்ற⋆



www.prapatti.com

மாயனார் வல்லவாழ்⋆ சொல்லுமா
    வல்லையாய் மருவு நெஞ்சே! (7)

மஞ்சு சேர் வான் எரி⋆ நீர் நிலம்
    காலிவை மயங்கி நின்ற⋆
அஞ்சு சேர் ஆக்கையை⋆ அரணம்
    அன்றென்றுய்யக் கருதினாயேல்⋆
சந்து சேர் மென்முலைப்⋆ பொன்மலர்ப்
    பாவையும் தாமும்⋆ நாளும்
வந்து சேர் வல்லவாழ்⋆ சொல்லுமா
    வல்லையாய் மருவு நெஞ்சே! (8)

வெள்ளியார் பிண்டியார்⋆ போதியார்
    என்றிவர் ஓதுகின்ற⋆
கள்ளநூல் தன்னையும்⋆ கருமம்
    அன்றென்றுய்யக் கருதினாயேல்⋆
தெள்ளியார் கை தொழும் தேவனார்⋆
    மாமுநீர் அமுது தந்த⋆
வள்ளலார் வல்லவாழ்⋆ சொல்லுமா
    வல்லையாய் மருவு நெஞ்சே! (9)

‡மறைவலார் குறைவிலார் உறையுமூர்⋆
    வல்லவாழ் அடிகள் தம்மைச்⋆
சிறை குலா வண்டறை சோலை சூழ்⋆
    கோல நீள் ஆலி நாடன்⋆
கறையுலா வேல்வல்ல⋆ கலியன் வாய்
    ஒலியிவை கற்று வல்லார்⋆
இறைவராய் இருநிலம் காவல் பூண்டு⋆
    இன்பம் நன்கெய்துவாரே (10)

॥ திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம் ॥

www.prapatti.com